செய்தி வெளியீடு எண் : 683 நாள் : 10.04.2023

<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.284.32 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2828 குடியிருப்புகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (10.4.2023) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 284.32 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2828 குடியிருப்புகளை திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 330 பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகள், 5430 பயனாளிகளுக்கு பணி ஆணைகள் மற்றும் 518 பயனாளிகளுக்கு அடுக்குமாடி மற்றும் மனைகளுக்கான உரிமை ஆவணங்களை வழங்கினார்.

<u>தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்</u>

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் சென்னை என்.வி.என். நகர் திட்டப்பகுதியில் பழுதடைந்த பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமான திட்டத்தின் கீழ் தூண் மற்றும் 14 அடுக்குகளுடன் 104.10 கோடி ரூபாய் செலவில் 840 புதிய குடியிருப்புகள்;

தேனி மாவட்டம், தேனி, அப்பியபட்டி திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 41.50 கோடி ரூபாய் செலவில் 432 அடுக்குமாடி குடியிருப்புகள், போடிநாயக்கனூர், பரமசிவன் கோயில் தெரு திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 16.35 கோடி ரூபாய் செலவில் 168 அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இருங்களூர் பகுதி – 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 21.16 கோடி ரூபாய் செலவில் 240 அடுக்குமாடி குடியிருப்புகள், தஞ்சாவூர் மாவட்டம், கூடநாணல் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 19.21 கோடி ரூபாய் செலவில் 240 அடுக்குமாடி குடியிருப்புகள்;

ஈரோடு மாவட்டம், அரக்கன்கோட்டை திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 15.16 கோடி ரூபாய் செலவில் 180 அடுக்குமாடி குடியிருப்புகள், கோயம்புத்தூர் மாவட்டம், பச்சினம்பதி திட்டப்பகுதியில் தனி வீடுகளாக 6.88 கோடி ரூபாய் செலவில் 80 குடியிருப்புகள், உக்கடம் பகுதி IV திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 19.39 கோடி ரூபாய் செலவில் 224 அடுக்குமாடி குடியிருப்புகள்;

வேலூர் மாவட்டம், தொரப்பாடி திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 17.41 கோடி ரூபாய் செலவில் 160 அடுக்குமாடி குடியிருப்புகள், இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம்காத்தான் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 23.16 கோடி ரூபாய் செலவில் 264 குடியிருப்புகள்;

என மொத்தம் 284.32 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2828 குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. “நம் குடியிருப்பு, நம் பொறுப்பு” திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 1225.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 12,495 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

<u>குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகள் மற்றும் பணி ஆணைகள் வழங்குதல்</u>

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 330 பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 2 பயனாளிகளுக்கும், பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களிலுள்ள 157 பகுதிகளில் வசிக்கும் 5430 பயனாளிகளுக்கு தனி வீடுகள் கட்ட தலா 2.10 லட்சம் ரூபாய் வீதம் 114 கோடியே 3 லட்சம் மதிப்பீட்டிலான பணி ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 2 பயனாளிகளுக்கும், அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான 350 உரிமை ஆவணங்களும், மனைகளுக்கான 168 உரிமை ஆவணங்களும், என 518 பயனாளிகளுக்கு உரிமை ஆவணங்களை வழங்கிடும் அடையாளமாக 4 பயனாளிகளுக்கு ஆணைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in